இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 172 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – தை 19 – சனிக்கிழமை 01 பிப்ரவரி 2025 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 172 : Thiruvalluvar Year - 2056 - Thai 19 - Saturday 01 February 2025 - Dak 12 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.1.2025) வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில், சென்னை, வில்லிவாக்கம், பாடி மேம்பாலத்தின்கீழ், சிவசக்தி காலனியில் சுமார் 3.93 ஏக்கர் பரப்பளவில் 53.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில், அமைக்கப்படவுள்ள சர்வதேச தரத்திலான கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையத்தின் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், அ. வெற்றியழகன், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.1.2025) வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை சார்பில், ஸ்டான்லி மருத்துவமனை சாலையில், கட்டப்பட்டு வரும் 776 புதிய குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தபோது, வீடு ஒதுக்கீடு பெற்றுள்ள பயனாளிகளிடம் வசதிகள் குறித்து கேட்டறிந்தார். அப்போது பயனாளிகள் தங்களது நன்றியை தெரிவித்துக்கொண்டனர். இந்த ஆய்வின்போது, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## அனைத்துப் பிரச்சினைகளிலும் அரசுக்கு எதிராகத்தான் செயல்படுகிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி !

# வடசென்னையை - வளர்ந்த சென்னையாக மாற்றுவோம் !

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

**சென்னை, பிப்.1-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வடசென்னையில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை ஆய்வு செய்தபின், செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், ‘தமிழ்நாடு ஆளுநர் அனைத்துப் பிரச்சினைகளிலும் அரசுக்கு எதிராகத்தான் செயல்பட்டு வருகிறார்’ என்றும், ‘வட சென்னையை வளர்ந்த சென்னையாக நிச்சயம் ஓராண்டுக்குள் மாற்றுவோம்’ என்றும் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.1.2025) வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் திட்டப் பணிகளை ஆய்வு செய்த பின்னர், செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

நான் சென்னை மாநகராட்சிக்கு மேயராக இருந்தபோதும், தொடர்ந்து துணை முதலமைச்சராக இருந்தபோதும் இதே வடசென்னை பகுதிக்கு குறிப்பாக சென்னைக்கு என்னென்னப் பணிகளையெல்லாம் செய்தேன் என்பது உங்களுக்குத் தெரியும். அதில் குறிப்பிட்டு சொல்லவேண்டும் என்றால், மழைநீர் வடிகால் பணிகளை மேற்கொண்டது, போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருந்த 10 இடங்களில் மேம்பாலங்கள் கட்டியதை பெரிய சாதனையாக நான் கருதுகிறேன்.

சென்னையை சிங்காரச் சென்னையாக மாற்ற வேண்டும் என்ற அடிப்படையில் பல்வேறு பணிகள் செய்தோம். இப்போது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு வந்த பிறகு, சென்னை மாநகராட்சியின் பொறுப்பை மீண்டும் தி.மு.க ஏற்ற பிறகு பல்வேறுப் பணிகளை சென்னைக்கு செய்திருக்கிறோம்.

### ரூ.6309 கோடியில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள்

அதில் குறிப்பாக, வடசென்னை பகுதிக்கு, சட்டமன்றத்தில் ஏற்கனவே 1000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வட சென்னை வளர்ச்சி திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்து அறிவிப்பை வெளியிட்டேன். ஆனால், அந்த 1000 கோடி ரூபாயும் தாண்டி பல்வேறு துறைகளின் ஒத்துழைப்போடு சுமார் 6309 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. மொத்தப் பணிகள் 252. அந்த 252 பணிகளில்29பணிகள்முழுமையாகமுடிவடைந்துள்ளது. 166 பணிகள் நடைபெற்று வருகிறது. விரைவில் இந்த பணிகளும் முடிவடைய இருக்கிறது. எனவே, இந்த ஓராண்டு காலத்திற்குள் அனைத்துப் பணிகளையும் முடிக்க வேண்டும் என்று அனைத்துத் துறை அலுவலர்களுக்கும் அறிவுறுத்தியுள்ளேன்.

தொடர்ந்து, நம்முடைய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு, மேயர், இந்தப் பகுதி நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு பணிகளை துரிதப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

நானும், இரண்டாவது முறையாக ஏற்கனவே, அடிக்கல் நாட்டு விழாவில் கலந்துகொண்டாலும், தொடர்ந்து நடைபெற்று வரும் பணிகளை ஆய்வு மேற்கொண்டு வருகிறேன். துணை முதலமைச்சர் அவர்களையும், சம்மந்தப்பட்ட துறை அமைச்சர்களையும் தொடர்ந்து ஆய்வு மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளேன். அவர்களும் இந்தப் பணிகளை துரிதப்படுத்தி கொண்டிருக்கிறார்கள்.

வட சென்னையைப் பொறுத்தவரை இது ஒரு வளர்ந்த சென்னையாக நிச்சயமாக இந்த ஓராண்டுக்குள் உருவாகும் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அந்தப் பணிகளை தான் இன்றைக்கு நான் ஆய்வு கொண்டேன்.

**செய்தியாளர்** - *தமிழ்நாடு ஆளுநர் தொடர்ந்து அரசு மீது குற்றச்சாட்டை வைத்துக்கொண்டு வருகிறார். அறிக்கை வெளியிடுகிறார். எக்ஸ் வலைதளத்திலும் குற்றச்சாட்டை வைக்கிறாரே.*

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்** - ஒன்று, இரண்டு மட்டுமல்ல, எல்லாவற்றிற்கும் குற்றச்சாட்டு வைக்கிறாரே! அனைத்து பிரச்சினைகளிலும் அரசுக்கு எதிராகதான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். அது எங்களுக்கு நன்றாகதான் உள்ளது. தொடர்ந்து அதை செய்ய வேண்டும். ஏன் என்றால், அதை செய்ய செய்யதான் எங்களுக்கு மட்டுமல்ல, மக்களுக்கும் வேகம் வருகிறது. அவருடைய போக்கு இந்த ஆட்சிக்கு சிறப்பைதான் சேர்க்கிறது. எனவே, அவர் அதை தொடர்ந்து செய்யட்டும், தொடர்ந்து செய்ய வேண்டும் என்று நான் ஆளுநரை கேட்டுக் கொள்கிறேன்.

**செய்தியாளர்** - *காமராஜர் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் நியமனம் குறித்து தேடுதல் குழுவை ரத்து செய்து ஆளுநர் அறிவித்திருக்கிறாரே அது பற்றி.....*

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

## பேரறிஞர் அண்ணா 56-வது நினைவு நாள்!

## முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# பிப்-3 அன்று அமைதிப் பேரணி!

### மாவட்டக் கழகத் தோழர்களுக்கு – சென்னை மாவட்டக் கழகச் செயலாளர்கள் வேண்டுகோள்!



காஞ்சி தந்த காவியத் தலைவர் - உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டுக் கொலுவீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர் - தமிழ் மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ்நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் - கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் - "இப்படை தோற்கின் எப்படை வெல்லும்” என்று தம்பிமார் பெரும்படையைக் கண்டு, நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன் - "மெட்ராஸ் ஸ்டேட்" என்ற பெயரை "தமிழ்நாடு" என்று பெயர் மாற்றம் செய்து தாய்க்குப் பெயர் தந்த தனிப் பெரும் தனயன் - சுயமரியாதைச் சுடரொளி - சொக்க வைக்கும் சொற்பொழிவாளர் - எழுத்து வேந்தர் - தென்னகத்தின் மிகப் பெரும் அரசியல் தலைவர் - **பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவு நாளினையொட்டி, முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு மற்றும் கழக முன்னணியினர் பிப்ரவரி - 3, திங்கட்கிழமை காலை 7.00 மணிக்கு காமராசர் சாலையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவார்கள்.**

இந்த அமைதிப் பேரணி வாலாஜா சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலை அருகிலிருந்து புறப்பட்டு அண்ணா சதுக்கத்தை சென்றடையும்.

கழக இந்நாள் - முன்னாள் அமைச்சர்கள், இந்நாள் - முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாணவர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, ஆதிதிராவிடர் நல உரிமைப் பிரிவு, மீனவர் அணி, கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை, இலக்கிய அணி, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய அனைத்து அணியினரும் அண்ணா அவர்களின் நினைவு போற்றி அஞ்சலி செலுத்த திரண்டு வாரீர் என சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை கிழக்கு, சென்னை தெற்கு, சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு ஆகிய மாவட்டக் கழகங்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

**நாள் : 31.01.2025** **சென்னை மாவட்ட தி.மு.க.**

